செ.வெ.எண்: நாள்:12.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் மண்பரிசோதனை நிலையம், வேளாண்மை பொறியியல் விரிவாக்க மையம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

-----

நாமக்கல் மாவட்டம், வசந்தபுரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் மண்பரிசோதனை நிலையம், வேளாண்மை பொறியியல் துறையின் வேளாண்மை பொறியியல் விரிவாக்க மையம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.08.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மண் பரிசோதனை நிலையத்தில் மண் மாதிரி எடுக்கும் முறைகள், வட்டார வாரியாக மண் மாதிரி இலக்கு, வரவு மற்றும் பகுப்பாய்வு குறித்தும், மண் மற்றும் நீர் மாதிரிகள் ஆய்வகத்தில் பெறப்படும் விதம் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், துறை அலுவலர்களிடம் உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் குறித்து கேட்டறிந்து, உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்களது பயணத் திட்டத்தின் போது கிராம நிர்வாக அலுவலருடன் ஒருங்கிணைந்து பயிர் சாகுபடி பரப்பினை ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார். வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கில் கருவிதைகள், ஆதார விதைகள் மற்றும் சான்று விதைகள் ஆகியவற்றின் இருப்பு மற்றும் தொடர்புடைய சான்று அட்டைகளின் விவரங்கள், திரவ உயிர் உரம், திட உயிர் உரங்கள், பல்வேறு பயிர்களுக்கான நுண்ணூட்ட சத்துகள் ஆகியவற்றின் பயன்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்து, இவற்றில் நுண்ணூட்டசத்து (நிலக்கடலை) இருப்பினை புத்தக இருப்புடன் ஒப்பிட்டும், மானிய விண்ணப்பம் மற்றும் அதற்குரிய விற்பனை இரசீதினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். தோட்டக்கலை உதவி இயக்குநரிடம் மாவு பூச்சியால் பாதிக்கப்பட்ட மரவள்ளி சாகுபடி பயிர்ப்பரப்பு குறித்து கணக்கீடு மேற்கொண்டு அதன் விவரங்களை சமர்பிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, வேளாண்மை பொறியியல் துறையின் வேளாண்மை பொறியியல் விரிவாக்க மையத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த CE -06 TATA HITACHI, MULTI CROP THRASHER, Tractor ஆகிய வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்தது குறித்தும், இதுவரை இயந்திரம் மூலம் மேற்கொண்ட பணி விவரங்கள் மற்றும் பயனாளிகள் விவரம் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட பதிவேடுகளுடன் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள், பணிபுரிவோர் விபரம் மற்றும் காலிப்பணியிடங்கள் ஆகிய விபரங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குநர் திரு.பொ.அசோகன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.கா.முருகன், வேளாண்மை உதவி இயக்குநர் திருமதி.தி.அன்புச்செல்வி, தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு.ப.மணிகண்டன், வேளாண்மை பொறியியல் துறை உதவிப்பொறியாளர்கள் உட்பட வேளாண்மை துறை அலுவலர்கள், தோட்டக்கலை துறை அலுவலர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.